5th September 1958] [Sri M. Kalyanasundaram]

Minister should have brought a Bill as soon as the Assembly meeting was over. Then it would have acted as a check against the landlords. When landlords come to know that the Bill is not going to be enacted, they will evict the tenants. 10-10 a.m.

MR. SPEAKER: Hon. Member must remember that grievances cannot be brought forward in an adjournment motion.

SRI M. KALYANASUNDARAM: The points raised are the action of the landlords and the action of the police in assisting the landlords in evicting the tenants. The matter is regarding eviction.

MR. SPEAKER: Unfortunately, the hon. Member has mixed up the question with the issue of eviction with police aid. If he brings in a separate motion on eviction alone, I shall consider it on its merits.

III.—PRIVILEGE MOTION *RE* A PUBLICATION IN THE 'KALKI'.

MR. SPEAKER: There is now a motion of privilege raised by Sri V. S. Manickasundaram. The hon Member should not argue on the merits of the case. He may make a brief statement.

SRI V. S. MANICKASUNDARAM: Sir, I beg to raise a point of privilege. கனம் சபாநாயகர் அவர்களே, 31–8–1958 தேதியிட்ட கல்கி இதழில் "ஜில்லாப் பிரிவினை" என்ற உப தலையங்கத்தில் "ஜில்லாப் பிரிவினைத் திட்டத்தைச் சென்னை சர்க்கார் மேற்கொள்வது உசிதமாகத் தோன்றவில்லை. சிறு ஜில்லாவாக இருந்தால் நிர்வாகம் சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, சட்ட சபை அங்கத்தினர்கள் தங்கள் அக்கிரமச் செல்வாக்கை விருத்தி செய்து கொள்ளப் பார்க்கிறார்கள். சட்ட சபை அங்கத்தினர்கள் நிர்வாகத்தில் பிரவேசிப்பது நியாயமல்ல என்று கேரள ராஜ்ய நிர்வாகத்தைப் பற்றி குறை சொல்லிக் கொண்டிருக்கும்போதே அது காங்கிரஸ் நிர்வாகத்தில் தலை விரித்தாடுகிறது" என்று வெளியாகியிருக்கிறது. இந்தப் பிரசுரம் என்னுடைய அபிப்பிராயத்தில் சட்டசபை அங்கத்தினர்களைப் பற்றி அவதூறாகப் பேசுவதாகும். சட்ட சபை அங்கத்தினர்களைப் பற்றி அவதூறாகப் பேசும் பட்சத்தில் அது சட்டசபை அங்கத்தினர்களுடைய உரிமையை பாதிக்கும் என்பதற்கு "மேய்ஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ்" லிருந்து ஒரு பகுதியைப் படித்துவிட்டு இதைத் தங்கள் தீர்ப்புக்கு விடுகிறேன்.

"Written imputations as affecting a Member of Parliament amounts to breach of privilege, without perhaps, being libels at common law".

இந்த நிலைமையில் இது சட்டசபை அங்கத்தினர்களுடைய உரிமையை பாதிக்கும் ஒரு விஷயம் என்று நான் நினைப்பதால், இதற்குத் தாங்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: இந்த மோஷன் என்ன? எந்தப் பத்திரிகையைப்பற்றி?

MR. SPEAKER: நான் தான் "கல்கி" யைப் பற்றி என்றுசொன்னேனே The hon. Member, Sri V. S. Manickasundaram has given notice of a motion regarding a breach of privilege. He states that

[Mr. Speaker] [5th September 1958.

the Tamil Weekly ' Kalki ' on page 4 of the 31st August 1958 issue under the heading ' ஜில்லா பிரிவினை ' has made a statement which is derogatory to the House.

SRI M. KALYANASUNDARAM : What is the motion, Sir?

MR. SPEAKER : The hon. Member read it just now. On going through this article, I find that one passage which may be construed as wrong is the reference ' சட்டசபை அங்கத்தினர்கள் தங்கள் அக்கிரமச் செல்வாக்கை In my opinion, this does not refer to the conduct of any Member in the Legislative Assembly nor does it refer to any business conducted or to be conducted in the House. The matter pertains only to the activities of Members outside the Legislative Assembly. Though this comment is not in good taste, I do not think that a *prima facie* case has been made out. I therefore rule that no *prima facie* case of breach of privilege has been made out.

IV.—MOTION UNDER RULE 40 *RE* KALEESWARAR MILLS, COIMBATORE.

MR. SPEAKER : Notice of the following motion under rule 40 of the Assembly Rules has been given by hon. Members, Sri N. Marudachalam and Srimathi Kolandai Ammal :

" தொழிலாளிகளுக்கு மூன்று மாதமாக சம்பளம் கொடுக்கப்படாமல், எவ்வித எச்சரிக்கையுமின்றி சட்ட விரோதமாக மூடப்பட்ட கோவை காளிஸ்வரர் மில்லை சர்க்கார் எடுத்து நடத்துமாறும், கம்போடியா மில் தொழில் தகராறை தீர்த்து வைக்குமாறும். "

SRI N. MARUDACHALAM : கனம் சபாநாயகர் அவர்களே, கோயம்புத்தூரிலுள்ள காளிஸ்வரர் மில்லில் சென்ற மே மாதத்திலிருந்து அங்கே வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. இவ்வாறு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற விஷயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் கூட, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சம்பள பட்டுவாடா சட்டப் பிரகாரம் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் அந்த மில் முதலாளி ஹைகோர்ட்டு தீர்ப்பு வந்த பிறகும் கூட அதை மீறி யிருக்கிறார். அத்தீர்ப்பை மீறின பிறகும் கூட, அரசாங்கம் அந்த மில் முதலாளி மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தவிர, சென்ற மாதம் 10-ம் தேதியன்று, சட்டவிரோதமாக, எந்தவித எச்சரிக்கையும் இல்லாமல் மில் மூடப்பட்டுள்ளது. மில்லை மூடுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னால் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அவ்வாறு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. மில் மூடிய பிறகும் கூட, தொழிலாளிகள் தங்களுடைய சம்பளத்தைப் பெறுவதற்காக, வெளியே வந்தால் மில் பேல்கள் வெளியே போய்விடும் என்ற காரணத்தினால், உள்ளே இருந்து கொண்டு மில்லைப் பாதுகாத்து, 16-ம் தேதி வரையிலும் மில்லுக்குள்ளேயே இருந்தார்கள். இந்த விவரம் அரசாங்கத்துக்கும் தெரியும். மந்திரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் அதன் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தீர்ப்பு வந்த பிறகு, மத்திய அரசாங்கத்தின் லேபர் கமிஷனரும், தொழில் சங்கத் தலைவர்களும், அவர்கள் மூன்று பேர்கள் நியமித்தார்களே அவர்களும் சேர்ந்து, ' 2-ம். தேதியன்று சம்பளம் கொடுக்கப்படவேண்டும், 5-ம் தேதியிலிருந்து மில்லை நடத்தவேண்டும்' என்று கையெழுத்திட்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தை மீறினதற்காக எந்தவிதமான